மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி அவசியம் ஏற்படின், புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கும்முன்னர், அப்பகுதியில் மாணவ, மாணவியர் இடையே உள்ள வரவேற்பு, அப்பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட மகளிர் கல்வி மற்றும் மகளிர் மேம்பாட்டிற்காக பல சிறப்பான நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திவரும் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

108—

பேருந்து வசதி

***10966—திரு. பி. மூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்குத் தொகுதி, மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து சர்வேயர் காலனி, மூன்றுமாவடி, கண்ணனேந்தல், அய்யர் பங்களா, ஆனையூர் வழியாக திருப்பரங்குன்றம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை, மாட்டுத்தாவணியிலிருந்து சர்வேயர் காலனி, மூன்றுமாவடி, கண்ணனேந்தல், அய்யர் பங்களா,

ஆனையூர், பாத்திமா கல்லூரி, குரு தியேட்டர், காளவாசல் வழியாக திருப்பரங்குன்றம் வரை உள்ள தடத்தினுடைய தூரம் 17.45 கி.மீ. ஆகும்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஆர். விஜயபாஸ்கர்: மாட்டுத்தாவணியிலிருந்து திருப்பரங்குன்றம் செல்வதற்கு இது ஒரு சுற்று வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் அனைத்துப் பகுதிகளுக்கும், பகுதி, பகுதியாகப் பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, இப்பேருந்து வசதிகளே போதுமானதாக உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றிலே இந்தச் சட்டமன்றத்தில் 60 ஆண்டு காலம் மக்களுக்காகப் பணியாற்றி, வைர விழா கண்டிருக்கக்கூடிய எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞர்களை ஒருசேரப் பெற்று, குழந்தை உள்ளத்திற்குச் சொந்தக்காரராக விளங்கும், சட்டமன்றத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவரும், எங்களுடைய செயல் தலைவருமான தளபதியார் அவர்களுக்கும் வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்டுத்தாவணியிலிருந்து சர்வேயர் காலனி, மூன்றுமாவடி, கண்ணனேந்தல், அய்யர் பங்களா, ஆனையூர், பாத்திமா கல்லூரி, குரு தியேட்டர் வழியாக திருப்பரங்குன்றத்திற்குச் செல்வதற்கு, புதிதாக ஒரு பேருந்தை இயக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றேன். இந்தப் பகுதியிலே ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். மாட்டுத்தாவணியிலிருந்து பல்வேறு கல்லூரிகள் மற்றும் பள்ளிகளுக்கு மாணவர்கள் காலை நேரங்களிலும், மாலை நேரங்களிலும் செல்வது என்பது, மிகவும் சிரமமான சூழ்நிலையாக இருக்கிறது. அடுத்து, முருகப் பெருமானினுடைய அறுபடை வீடுகளிலே ஒன்றாக

2017 ஜூன் 29]

திருப்பரங்குன்றம் விளங்குகிறது. அங்கே பக்தர்கள் சென்று வருவதற்கு வசதியாக பேருந்துகளை இயக்கினால், நிச்சயமாக போக்குவரத்துத் துறைக்கு அது இலாபகரமாக இருக்கும். எனவே, மாணவர்கள் மற்றும் பொது மக்கள் சென்று வருவதற்கு வசதியாக, இந்த வழித்தடத்திலே பேருந்தை இயக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து தல்லாகுளம் பேருந்து நிலையம் மற்றும் திருப்பரங்குன்றம் வழியாக தினசரி 297 தனி நடைகளும், அதேபோன்று, ஆரப்பாளையத்திலிருந்து குரு தியேட்டர், காளவாசல், திருப்பரங்குன்றம் வழியாக திருமங்கலத்திற்கு தினசரி 396 தனி நடைகளும் இயக்கப்படுகின்றன. மதுரை, மாட்டுத்தாவணியிலிருந்து சர்வேயர் காலனி, மூன்றுமாவடி, கண்ணனேந்தல், அய்யர் பங்களா, ஆனையூர், குரு தியேட்டர், காளவாசல் வழியாக திருப்பரங்குன்றம் செல்வது என்பது ஒரு சுற்று வழித்தடமாகும். இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை ஆய்வு செய்து, தேவையிருக்குமாயின், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அந்த வழித்தடத்திலே பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையைப் பெற்று பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.*

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று புதிய வழித்தடங்களை அமைப்பதற்காகத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டு தமிழகத்திலே முதல்வராக இருந்தபோது, பொது மக்களினுடைய நலனைக் கருதி, பொது மக்களின் கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றுகின்றவகையில், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும்*

இரண்டு புதிய வழித்தடங்களை பரிந்துரை செய்வதற்கு வழிவகுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நிலை இப்போது உருவாகுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு, 500 மக்கள்தொகை கொண்ட கிராமங்களுக்கும் பேருந்துகளை இயக்கிவருகிறது. இத்தகைய சரித்திர சாதனையைப் படைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேவையிருக்குமாயின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை முன்னரே கூறியிருந்தேன். புதிய பேருந்து வழித்தடங்களுடைய அந்தக் கோரிக்கைகளைப் பரிசீலித்து, அதன்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

முற்பகல் 11–05

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளைப் போற்றி வணங்குகிறேன். (குறுக்கீடு)

(உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் இருக்கையில் அமர்ந்து கொண்டு ஏதோ கூறிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தூசி கே. மோகன், ஒரு நிமிடம் இருங்கள். திரு. ரங்கநாதன், கேள்வி நேரத்திலே, துணைக் கேள்வி கேட்க அத்தனை உறுப்பினர்களும் வாய்ப்புக் கேட்கிறீர்கள். நான் லிஸ்ட் வைத்திருக்கிறேன். யார் யாருக்கு, எத்தனை துணைக்

2017 ஜூன் 29]

கேள்விகள் கேட்க அனுமதி கொடுத்திருக்கிறேன் என்ற லிஸ்ட்—ஐ வைத்திருக்கிறேன்: அதைப் பார்த்துத்தான் நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். இதுவரையில் யார் வாய்ப்புக் கேட்கவில்லையோ, அவர்களுக்குத்தான் நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். நீங்கள் அங்கு உட்கார்ந்துகொண்டு, தேவையில்லாமல் என்னை irritate செய்வதுமாதிரி, 'இவருக்குக் கொடுங்கள்; அவருக்குக் கொடுங்கள்' என்று நீங்களே recommend செய்தீர்களென்றால், பிறகு நான் எதற்கு இங்கு உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டும்? இதுமாதிரி ஒழுங்கீனமாக நடந்தால், நான் கடுமையாக இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கும் என்பதை உங்களுக்கு நான் எச்சரிக்கையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், பேசுங்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே இன்று தமிழகத்திலே நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிற எங்களுடைய இயக்கத்தினுடைய தலைவராக இருக்கின்ற, தமிழகத்தினுடைய முதல்வராக இருக்கின்ற மாண்புமிகு அண்ணன் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது செய்யாறு தொகுதிக்கு உட்பட்ட தென்னம்பட்டு, நாட்டேரி, பிரம்மதேசம், பனமுகை, புலிவலம் உள்ளிட்ட 15 கிராமங்களில் உள்ள மக்கள் சென்னை, பெங்களூரு, திருப்பதி செல்ல வேண்டுமென்றால், 20 கிலோ மீட்டர் தூரம் பயணித்து, காஞ்சிபுரம் சென்றுதான் பயணம் செய்யவேண்டும் என்ற நிலை உள்ளது. அந்த நிலையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், பிரம்மதேசம் புதூர் என்ற பகுதியில் பாலாற்றில் புதிய பாலம் அமைக்கப்பட்டு, இப்போது மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கிற அண்ணன் அவர்களால் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பாலம் வழியாக அருகிலுள்ள ஓச்சேரிக்கு புதிய பேருந்துத் தடம் உருவாக்கி, பேருந்துகளை இயக்கினால், மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையும், ஆசையும் நிறைவேறும் என்பதை உறுதிபடச் சொல்லி, தொகுதி மக்கள் பயன்பெறும் வகையில், அந்தப் புதிய பேருந்து வழித் தடத்தை உருவாக்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2017 ஜூன் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய பாலம் திறக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அவர் கூறிய அந்த வழித்தடத்தை ஆய்வு செய்து, அந்தப் புதிய பாலத்தின் வழியாகப் பேருந்துகளை இயக்குவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், இடைக்கால் பஞ்சாயத்தில், கலிதீர்த்தான்பட்டி என்ற ஒரு சிறிய கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்தில் மாணவ, மாணவியர் கிட்டத்தட்ட 100 பேர் இருக்கிறார்கள். அவர்கள் பஸ் ஏறி பள்ளிக்கூடம் செல்ல வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 1½ கிலோ மீட்டர் தூரம் நடந்து கலிதீர்த்தான்பட்டி விலக்கிற்குச் செல்ல வேண்டும். உரிய நேரத்தில் பேருந்து வராமல், தாமதமாக வந்தால், கூடுதலாக இன்னும் 3 கிலோ மீட்டர் நடந்து இடைக்காலுக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. அதேபோன்று, மாலை நேரங்களிலும் இதேநிலைதான்; சில சமயங்களில் பஸ் வருவதில்லை. பஸ் வராதபோது இந்த மாணவ–மாணவியர் இருட்டில் வீட்டுக்கு வந்து சேருவதற்கு சுமார் 7–00 மணி ஆகிறது. தயவுசெய்து அந்த கலிதீர்த்தான்பட்டி விலக்கு வருகின்ற பேருந்தினை, கலிதீர்த்தான்பட்டி கிராமத்திற்குள் வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த வழித்தடத்தில் பள்ளி மாணவர்களுக்குப் போதிய பேருந்து வசதி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அந்த வழித்தடத்திலே

2017 ஜூன் 29]

பள்ளி மாணவர்களுக்கென்று அந்தப் பேருந்துகளைச் சரியாக இயக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.*

திரு. டி.பி.எம். மைதீன்கான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதியில், பாளையங்கோட்டையில் இருக்கிற மத்தியப் பேருந்து நிலையத்திலிருந்து, பாளையங்கோட்டை மற்றும் பாளையங்கோட்டை மார்க்கெட், நெல்லை சந்திப்பு, நெல்லை டவுன் வழியாக மேலப்பாளையம் வரையிலும் மீண்டும் பேருந்து நிலையம் வந்து சேருகின்ற வகையிலேயும், அதேபோல, புதிய பேருந்து நிலையத்திலிருந்து மேலப்பாளையம் டவுன், ஜங்ஷன், பாளையங்கோட்டை மார்க்கெட், பாளையங்கோட்டை வரை சுற்றி வருகிறமாதிரி, அங்கு இருக்கிற மக்களின் சிரமத்தைக் குறைக்கின்ற வகையில் இரண்டு பேருந்துகள் விடப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலை, மாலை நேரங்களிலே, குறிப்பாக காலையிலே பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்களும், வேலைக்குச் செல்லக்கூடிய நபர்களும் அதிகமாக இருப்பதால் அந்த நேரங்களிலே தேவையான அளவுக்குப் பேருந்துகளை இயக்கி இருக்கிறோம். அதேபோல, மாலை நேரங்களிலும் பள்ளி மாணவர்கள் வீடு திரும்புவதற்கும், வேலைக்குச் செல்பவர்கள் வீடு திரும்புவதற்குண்டான வழிவகைகளைச் செய்து, தேவையான பேருந்துகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இயக்கி வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த வழித்தடத்தை ஆய்வு செய்து, அங்கு தேவை இருக்குமாயின், அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*